சென்னையிலிருந்து புறநகர் பேருந்து வழித்தடங்கள்

*** 605 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தடம் எண் 92-ஏ (பிராட்வே-ஊத்துக்கோட்டை) பேருந்தினை பேரண்டூர் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எப்போது நிறைவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தடம் எண் 92-ஏ (பிராட்வே-ஊத்துக் கோட்டை) பேருந்தினை பேரண்டூர் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : இந்த ஊருக்கு நல்ல தார்ச்சாலையும், 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் இருப்பதனால் ஊத்துக்கோட்டை பேருந்தினை 3 மைல் நீட்டித்து பேரண்டூர் வரை சென்று திரும்ப மறுபரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாலையின் காரணமாக இந்தப் பதில் தரப்படவில்லை. போதுமான பயணிகள் இருக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில் இந்த பதில் தரப்பட்டிருக்கிறது.

■ 606 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கண்ணம்பாக்கம் செல்லும் வழித்தடம் எண் 113 பேருந்து முறையாக, நேரந் தவறாமல் செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இவ்வழித்தடத்தில் பழைய வண்டியை மாற்றி புது வண்டி விடும் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 113 ஆம் எண் வழித்தடத்தில் (வள்ளலார் நகர்-கண்ணம்பாக்கம்) ஒரு பேருந்து ஓடுகிறது. நாளொன்றுக்கு ஆறு பயணத் தடவைகள் மேற்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் தான் இயங்கும் பேருந்து வழித் தடங்கள் அனைத்திலும் பேருந்துகளை நேரந் தவறாமல் விடுவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

(இ) இப்பேருந்துகளின் ஆயுட் காலமாகிய 8 ஆண்டுகள் முடிவடைவதன் மேல், அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : அந்தப் பேருந்துகளின் ஆயுட்காலம் இன்னும் இருந்தாலும் அவையெல்லாம் இடையிடையே நின்றுவிடுகின்றன என்ற புகார்கள் அடிக்கடி வருகின்றன. அந்த வழித்தடங்களிலே ஓடுகின்ற

1974 மார்ச் 25]

பேருந்துகளை வேறு வழித்தடங்களிலே விட்டு அந்தப் பகுதிக்கு புதிய பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா? அந்த வழி கடினமாக இருக்கின்ற காரணத்தினுலும் ஆந்திர எல்லையோரத்திலே ஓடக்கூடிய நிலையிருக்கிற காரணத்தினுலும் அங்கே புதிய பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்துகளை நல்லமுறையிலே பராமரிப்பதற்கும் அவற்றை ஒழுங்காக விடுவதற்குமான முயற்சிகள் அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளும்.

* 607. Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal under consideration to ply buses between Madras and Kadambathur in Chingleput district by the Pallavan Transport Corporation?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னைக்கும் கடம்பத்தூருக்கும் இடையில் 138ஏ எண் வழித்தடத்தில் ஏற்கனவே ஒரு பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்திலே ஓரே ஒரு பேருந்துதான் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிருர்கள். அங்கே பயணிகள் அதிகமாக இருக்கிருர்கள், சென்னைக்கு வேலைக்கு வரவேண்டியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினுல் மேலும் ஒரு பேருந்தை விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவும் இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இந்த பல்லவன் போக்குவரத்து கழகத்திலே நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுவதால் அந்த வழித்தடமும் நஷ்டத்தில்தான் நடக்கிறதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த வழித்தடமும் நஷ்டத்திலே தான் நடைபெறுகிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு ஆண்டிற்கு 80 லட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படுகிறது என்ருல் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஓடுகின்ற பேருந்துகளிலே 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. 1,000-க்கும் மேற்பட்ட பஸ்கள் சிடியிலே ஓடுகின்ற நிலைமையினுலும் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தொட்டுக்கொண்டு ஓடுகின்ற நிலைமையினுலும் 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஒன்று நாம் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஓடுகின்ற பேருந்துகள் அனைத்தையும் தேசிய